# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF, SHENCOTTAH

O.S.No.29/2024

Deposition of witness for PW1

| | | |
|---|---|---|
| Name | : | கணேசன் |
| Father's Name | : | ராமகிருஷ்ணன் |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 68 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 17.04.2026.

<u>முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன்.

1. 24.05.1976 தேதியிட்ட சங்கரலிங்கம் கரையாளர் அவர்கள் குமாரர் முத்தையா கரையாளர் எழுதி வைத்த பதிவு பெற்ற விருப்புறுதி ஆவணத்தின் அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 19.02.2010 தேதியிட்ட காலம் சென்ற ராமகிருஷ்ண கரையாளர் அவர்கள் மனைவி சங்கரம்மாள், காலம்சென்ற முத்தையா கரையாளர் அவர்கள் மனைவி நல்லாட்சி அம்மாள், காலம்சென்ற ராமகிருஷ்ண கரையாளர் அவர்கள் குமாரர்கள் கணேசன், முத்தையா, சரவணன் மற்றும்

குமாரத்திகள் சந்திரா, சுப்புலட்சுமி, சாந்தி, லதா மற்றும் முத்துலட்சுமி ஆகியோர்கள் பிறப்புவித்துக்கொண்ட பதிவு பெற்ற பாகப்பிரிவினை ஆவணத்தின் சார்பதிவாளர்நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. வாதி மற்றும் அவரது தாயாரைப் பெற்ற தாத்தா முத்தையா கரையாளர் ஆகியோர்களின் பெயர்களில் உள்ள கூட்டுப்பட்டாவின் இணையதள நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. கடையநல்லூர் வட்டம், கிளாங்காடு கிராமம், புஞ்சை புல எண்.314 க்குரிய நில அளவை வரைபடத்தின் இணையதள நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. கடையநல்லூர் வட்டம், கிளாங்காடு கிராமம், புஞ்சை புல எண்.314/16 க்குரிய நில அளவை வரைபடத்தின் இணையதள நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. வழக்குத்தொகுப்புரை அட்டவணைச் சொத்துக்களை விளக்கும் வரைபடம் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

**ஒப்பம்/- K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**